1970 ஏப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

ஆகவே இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன். தெளிவாகவே இருக்கிறது. விதிகளை வேண்டுமானால் படிக்கிறேன்.

The administrative department will obtain the opinions of such officers and bodies as it seems necessary on the draft Bill and submit the opinion received with a copy of the tentative draft bill to the Minister in charge.

If a Bill which is proposed to be introduced in the Legislature falls within the concurrent legislative field, the administrative department principally concerned shall, whenever possible, consult the administrative department of the Government of India dealing with the subject-matter of the Bill on the proposed legislation. Consultation with the Government of India shall also be necessary in cases where a Bill may seek to amend a law falling within the concurrent legislative field, eventhough such law applies only to the State of Madras. Such consultation should be made after the stage indicated in clause (1).

என்று தெளிவாகவே இப்படிப்பட்ட மசோதாக்கள் தயாரிப்பதற்கு முன்பு நம் மாநிலத்தில் உள்ள அத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தியாவி லுள்ள அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோடு அதற்குரிய மற்ற துறை அதிகாரிகளோடு கலந்து முடிவு எடுக்க வேண்டுமென்று நம் விதிகள் தெளிவாக இருக்கின்றன. ஆகவே, எந்தவிதமான முரண் பாடும் இல்லை. எந்தவிதமான உரிமை மீறுதலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) மாநிலங்கள் அவைத் தேர்தலில் இரு வாக்குகள் செல்லாதவை ஆகிவிட்டது பற்றி திரு. டி. மார்டின் பேசிய பேச்சு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. அக்னிராஜு அவர் கள் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் கூறியிருப்பது—

On 31st March 1970 Thiru T. Martin, M.L.A., while rising on a point of order under Rule 83 of the Tamil Nadu Legislative Assembly Rules has *inter alia* stated as follows :—

கண்ணியமிக்க பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்களுடைய பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறோம்.. ராஜ்ய சபை தேர்தலில் 2 வோட்டுகள் செல்லாத வோட்டுகளாக ஆகிவிட்டன.......... கண்ணிய மான இந்தச் சபையிலே நாமெல்லாம் உறுப்பினர்கள். இரண்டு வோட்டுக்கள் செல்லாத வோட்டுக்களாகிவிட்டன. இதைப்பற்றி மக்கள் வோட்டுப் போடுவதற்குக் கூடத் தெரியாத நிலைமையிலே இரண்டு வோட்டுக்கள் ஆகிவிட்டன என்று பொதுமக்கள் பேசக்கூடிய நிலைமை யிலே இந்தச் சட்டசபையினுடைய கௌரவத்தைப் பாதிக்கும் செயல் நடைபெற்று இருப்பதால் தாங்கள் அதைப்பற்றி விசாரணை நடத்தி இரண்டு வோட்டுக்கள்........என்று முடித்திருக்கிறார்கள்.

The above statement is a gross reflection upon the conduct of the Hon. Speaker and the Members of this Hon. House and also lowers the dignity and prestige of the Members and also of the House in the eyes of the general public. By his statement the Member also indirectly attributes motives to the Hon. Speaker, Hon. Ministers and other

Hon. Members of the House that they do not know even the procedure of voting in the election. Hence it is a contempt of the House and also a breach of privilege.
என்று ஓர் உரிமை மீறிய வழக்கை அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

திரு. எஸ். அக்னிராஜு: தலைவர் அவர்களே, திரு மார்டின் அவர்களுடைய இந்தப் பேச்சால் இங்கிருக்கிற 234 உறுப்பினர்களைப் பற்றியும் பொதுவான முறையில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள பொதுமக்கள் இதை நம் சட்டமன்ற உறுப்பினர் செய்திருப்பாரோ என்றதொரு அச்சமும் ஒரு பேச்சும் வரக்கூடிய அளவில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். மேலும் வோட்டு போடுவதில் செல்லுபடியாகக் கூடிய வோட்டுதான் போட வேண்டும் என்றில்லை. வோட்டுப் போடும் முழு உரிமையும் உறுப்பினர்களுக்கு இருக்கிறது. செல்லுபடியாகாத வோட்டை யார் போட்டார்கள் என்று கண்டுபிடித்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் கூட அவர்கள் சொல்கிறார்கள். அந்த அளவில் அது இங்குள்ள ஒவ்வொரு உறுப்பினருடைய கௌரவத்தையும், இந்த சபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் பாதிக்கிற அளவில் உள்ள அந்தச் செயல், நம் கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் இருப்பதால் இதன் மீது தலைவர் அவர்களின் தீர்ப்பைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—திரு அக்னிராஜு அவர்கள் எழுப்பி யுள்ள உரிமைப் பிரச்சினை மீது நாளைக்கு என் முடிவைத் தெரிவிக்கிறேன்.

(ஈ) பேரவைத் தலைவரால் நீக்க ஆணையிடப்பட்ட சில பகுதிகளை "நவசக்தி" நாளிதழில் வெளியிட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் இப்பேரவையின் உரிமை மீறிய ஒரு காரியத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு கோ. பூவராகன், திரு வி. கே. கோதண்டராமன் ஆகியோர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். 4—4—1970 அன்று இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு கரு. சீமைச்சாமி அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியைச் சபையின் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றும், அப்பகுதிகள் பத்திரிகைகளிலும் வெளியிடப்படக்கூடாதென்றும் நான் அறிவித்திருந்தேன். அப்படி நீக்கப்பட்ட பகுதிகள் 5—4—1970 தேதியிட்ட "நவசக்தி" நாளிதழில் வெளியாகி இருக்கிறதென்றும், அது இந்த அவையின் உரிமையை மீறிய ஒரு நிகழ்ச்சி என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அறிக்கைகளில் எடுத்துக் காட்டியுள்ளனர்.

அதுபற்றி சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. கோ. பூவராகன்**: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பேசுகிற பேச்சுக்கள் இந்த மன்ற நடவடிக்கைகளுக்கும், இந்த மன்றத்தின் கௌரவத்திற்கும், கண்ணியத்திற்கும் குறைவு இல்லாமல் இருக்க வேண்டுமென்ற மரபை நாம் கடைப்பிடித்து வருகிறோம். அப்படி பேசும்போது சில சமயங்களில் தவறுதலாகப் பேசிவிட்டாலும் கூட அதை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டுமென்றும், அவைகள் பத்திரிகைகளில் வெளியிடப்படக் கூடாது என்றும் தாங்கள் கட்டளை பிறப்பிக்கிறீர்கள். அதை மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளு கிறோம். பத்திரிகைகளும் வெளியிடுவதில்லை.

இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி, பாராளுமன்றத்தில் பேசியதுபற்றி உரிமைப் பிரச்சினை கொடுத்திருப்பது உறுப்பினர்களுக்கும் தெரியும், தலைவர் அவர்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும் அதையொட்டி அன்றையதினம் இங்கு மிகவும் விரிவாகப் பேசும்போது இடையில்,